## கோபிசெட்டிபாளையம் நகராட்சி
## 31.10.2023 ந் தேதி நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்

1. கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் நகர்மன்றத்தலைவர் அவர்களின் கடிதம் நாள். 12.10.2023 இல் கோபிசெட்டிபாளையம் நகராட்சியை தேர்வு நிலை நகராட்சியிலிருந்து சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

கோபிசெட்டிபாளையம் நகராட்சியானது தமிழக அரசின் சிறப்பு திட்டங்கள் அனைத்தையும், குறித்த காலத்திற்குள் முடித்து சிறப்பான நகராட்சியாக செயல்பட்டு வருகிறது.

கோபிசெட்டிபாளைம் நகராட்சி 01.10.1949இல் அரசாணை எண் 1948 நாள் 01.10.1949 ன்படி, மூன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டது. அரசாணை எண் 194 நாள் 10.02.1970 இரண்டாம் நிலை நகராட்சியாகவும், அரசாணை எண் 1532 நாள் 21.09.1977ன்படி முதல் நிலை நகராட்சியாகவும் தரம் உயர்த்தப்பட்டது. அரசாணை எண் 238 நாள் 02.12.2008 ன்படி தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

2011 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மக்கள் தொகை 59523 ஆகும். தற்போதைய மக்கள் தொகை 66000/—ஆகும். நகராட்சியின் பரப்பளவு 7.51 சதுர கிலோ மீட்டர் ஆகும். இந்நகராட்சியானது 30 வார்டுகளாக பிரிக்கப்பட்டு இதில் 425 தெருக்கள் அமைந்துள்ளது.

கோபிசெட்டிபாளையம் நகராட்சியானது ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்நகராட்சியின் கிழக்கு பகுதியில் குள்ளம் பாளையம் மற்றும் பாரியூர் வெள்ளாளபாளையம் கிராம ஊராட்சியும், மேற்கே லக்கம்படட்டி பேரூராட்சியும், தெற்கே மொடச்சூர் கிராம ஊராட்சியும்,தென் மேற்கு பகுதியில் கலிங்கியம் ஊராட்சியும், வடக்கே பாரியூர் கிராம ஊராட்சியும் அமைந்துள்ளது.

இந்நகராட்சியின் எல்லையில் இருந்து இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான அருள்மிகு பாரியூர் கொண்டத்து காளியம்மன் திருக்கோயில், 1 கிலோ மீட்டர் தொலைவிலும், அருள்மிகு பச்சைமலை பாலமுருகன் திருக்கோவில் **நகராட்சி எல்லைக்கு அருகிலும்** மற்றும் அருள்மிகு பவளமலை முத்துகுமாரசாமி திருக்கோயில் 1/2 கிலோ மீட்டர் தொலைவி**லும்** அமைந்துள்ளது. இக்கோவில்களின் ஆண்டு திருவிழாவில் கலந்து கொள்வதற்கு சுமார் 1 இலட்சத்திற்கு அதிகமான மக்கள் அன்றைய நாட்களில் (Floating Population) நகரத்திற்குள் வந்து செல்கின்றனர்.

இந்நகராட்சி எல்லையில் இருந்து 16 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள ஈரோடு மாவட்டத்தின் சுற்றுலா தலமான கொடிவேரி அணைக்கட்டுக்கு இந்நகராட்சியின் வழியாகவே சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். ஈரோட்டில் இருந்து அருள்மிகு ஸ்ரீபண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், மற்றும் மைசூர் செல்வதற்கு இந்நகராட்சி வழியாகவே செல்ல வேண்டியுள்ளது. ஆதலால் இந்நகராட்சி மாவட்டத்தின் மைய பகுதியாக அமைந்துள்ளது.

நகராட்சியின் எல்லைக்குள் தினசரி மார்க்கெட்—1, வாரச்சந்தை —1, உழவர் சந்தை —1, மீன் வளத்துறையால் நடத்தப்படும் அங்காடி —1, Multiplex திரையரங்கம் —2, பெரிய திருமண மண்டபங்கள் —6, சிறிய அளவிலான திருமண மண்டபங்கள் —6 அமைந்துள்ளன. நகரமயமாதலின் விளைவாக நகராட்சியின் எல்லைக்கு அருகில் புதியதாக உருவாகியுள்ள ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு பணிபுரிய வருடம் முழுவதும் 3 இலட்சத்துக்கு அதிகமான பணியாளர்கள் (Floating Population) நகராட்சி எல்லைக்குள் வந்து செல்கிறார்கள் .

இந்நகராட்சி எல்லைக்குள் BSNL, அஞ்சலகம், மாவட்ட துணை கண்காணிப்பாளர் அலுவலகம், காவல் நிலையம், சார் ஆட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், மாவட்ட அரசு தலைமை மருத்துமனை, வட்டார போக்குவரத்து அலுவலகங்கள், ஊராட்சி ஒன்றிய அலுவலகம்,

பத்திர பதிவு துறை அலுவலகம், தேசிய மற்றும் நெடுஞ்சாலை துறை அலுவலகம், பொது பணி துறை அலுவலகம் மற்றும் பயணியர் மாளிகை, அரசு மேல்நிலைப்பள்ளி –3, அரசு உயர்நிலைப்பள்ளி –2, அரசு நடுநிலைப்பள்ளி –3, அரசு ஆரம்பப்பள்ளி –3, அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளிகள் –3 , தனியார்பள்ளிகள் –5, அங்கன்வாடி மையங்கள்–17, நியாய விலைக்கடைகள் –21, வங்கிகள் –18, அமைந்துள்ள பெரிய நகராகும். நகராட்சியின் எல்லையில் சுமார் 5000 மாணவ மாணவியர் பயிலும் கோபி கலை அறிவியல் கல்லூரி , சுமார் 2000 மாணவியர் பயிலும் PKR மகளீர் கலை அறிவியல் கல்லூரி அமைந்துள்ளது.

அரசாணை நிலை எண் 113. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 30.08.2019 ன்படி, நகராட்சிகளின் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு நகராட்சியின் தரத்தினை வகைபாடு செய்தல் குறித்து வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளது.

| வ.எண் | நகராட்சியின் நிலை | ஆண்டு வருவாய் |
|---|---|---|
| 1 | சிறப்பு நிலை | ரூ.15.00 கோடிக்கு மேல் |
| 2 | தேர்வு நிலை | ரூ.9.00 கோடிக்கு மேல்<br>ரூ.15.00 கோடிக்குள் |
| 3 | முதல் நிலை | ரூ.6.00 கோடிக்கு மேல்<br>ரூ.9.00 கோடிக்குள் |
| 4 | இரண்டாம் நிலை | ரூ.6.00 கோடிக்குள் |

மேற்கண்ட அரசாணையின் வழிகாட்டுதல்களின்படி, கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் கடந்த மூன்றாண்டுகளின் வருவாய், உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையின் ஆண்டு தணிக்கைச்சான்றுகளின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு உள்ளது.

| வ.எண் | ஆண்டு | வருவாய் ரூ.(கோடியில்) |
|---|---|---|
| 1 | 2019–2020 | 17.28 |
| 2 | 2020–2021 | 17.59 |
| 3 | 2021–2022 | 18.57 |

புதியதாக மேம்பாடு செய்யப்பட்டு வரும் வாரச்சந்தை, புதியதாக கட்டப்பட்டு வரும் தினசரி சந்தை ஆகியவற்றின் மூலம் நகராட்சிக்கு வருமானம் அதிகரிக்கப்படவுள்ளது. மேலும், இந்நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்துவதால் அரசின் மூலம் கிடைக்கப்பெறும் வரவினமும் அதிகரிக்கப்படும். ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மூலம் அதிகரிக்கப்படும் வருமானத்தை கொண்டு புதியதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்களுக்கான ஊதியம் வழங்க போதுமானதாக இருக்கும். மேலும், இது தொடர்பாக அரசு வழிகாட்டுதலின் படி இந்நகராட்சியின் எல்லைக்கு அருகே அமைந்துள்ள குள்ளம்பாளையம், பாரியூர் வெள்ளாளபாளையம், பாரியூர் நஞ்சகவுண்டன்பாளையம், கலிங்கியம் மற்றும் மொடச்சூர் ஊராட்சிகளும் இதனை தொடர்ந்து லக்கம்பட்டி பேரூராட்சியும் இந்நகராட்சியுடன் இணைக்கப்படும் பட்சத்தில் நிதிநிலைமை பெருகுவதுடன் பொதுமக்களின் அடிப்படை வசதிகள் உடனுக்குடன் பூர்த்தி செய்யப்படும். மேலும், கோபிசெட்டிபாளையம் நகராட்சியானது ஈரோடு மாவட்டத்தில் மையப்பகுதியில் அமைந்துள்ளதால் மேற்காணும் ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் இந்நகராட்சியுடன் இணைக்கப்படுவது இன்றியமையாதது ஆகும்.

எனவே, கோபிசெட்டிபாளையம் நகராட்சியை சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்த மேற்காணும் விபரங்களுடன் அரசுக்கு உரிய கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.674**

2. இந்நகர்மன்ற தீர்மான எண்.556, நாள்.25.07.2023 இல் இந்நகராட்சியில் பொறியாளருக்கு பயன்படுத்தப்பட்டு வரும் ஈப்பு வாகனம் TN 36 F 7005 என்ற வாகனம் வாங்கப்பட்டு 19 வருடங்கள் முடிவுற்றதால் தற்பொழுது மத்திய அரசின் மோட்டார் வாகன சட்டப்படி பதிவு

செய்யப்பட்டு 15 வருடங்களுக்கு மேல் உள்ள வாகனங்களை புதுப்பித்து மீண்டும் இயக்க இயலாத நிலை உள்ளதால் புதிதாக DGS & D விலை விகிதத்தில் மகேந்திரா பொலிரோ வாகனம் ரூ.10.00 இலட்சத்தில் நகராட்சி பொது நிதியில் வாங்க ஒப்புதல் வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து மேற்படி புதிய ஈப்பு வாகனம் வாங்குவதற்கு அனுமதி கோரி இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1635/2023/இ1 நாள்.11.07.2023 மற்றும் 29.08.2023 இல் கருத்துரு அனுப்பப்பட்டதில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்.30500/2023/எம்எ1 நாள்.14.09.2023 இல் இந்நகராட்சியால் அனுப்பப்பட்ட மூன்றாண்டு நிதிநிலை அறிக்கையினை ஆய்வு செய்யப்பட்டதில் தொடர்ச்சியாக வரவினை காட்டிலும், செலவு அதிகமாகவும் பற்றாக்குறையாகவும் இருப்பதாக அறிய முடிகிறது என்றும், இவ்வாகனம் வாங்குவதால் ஏற்படும் கூடுதல் செலவினம் எவ்வகையில் மேற்கொள்ளப்பட உள்ளது என்பது குறித்து குறிப்பான குறிப்புரையுடன் முன்மொழிவினை அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி புதிய ஈப்பு வாகனம் ரூ.10.00 இலட்சத்தில் DGS & D விலை விகிதத்தில் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள இயலாததால், குடிநீர் நிதியிலிருந்து ஈப்பு வாகனம் வாங்குவதற்கு மேற்படி செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1635/2023/இ1)

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. இச்செலவின தொகையை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவிடலாம் .

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.675**

3. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 NRP நகர் மற்றும் வார்டு எண்.25 பெரியார் திடல் அருகில் உள்ள பழுதான எச்.டி.பி.இ டேங்க் மேடை மாற்றியமைத்தல் வார்டு எண்.28 ராஜன் நகர் பகுதிக்கு புதியதாக குழாய் , எச்.டி.பி.இ டேங்க் மற்றும் எச்.டி.பி.இ டேங்க் மேடை அமைத்தல் மற்றும் வார்டு எண்.19 இல் மேல்நிலைத்தொட்டியில் உள்ள கசிவு சரி செய்தல் ஆகிய பணிகளுக்கு ஆகும் செலவினம் ரூ.1,45,000/- ஆகும்.இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காண் செலவிலனத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கோள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.676**

4. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் தூய்மை இந்தியா 2.0 திட்டத்தின் கீழ் தற்பொழுது கீரிப்பள்ள ஓடையில் உள்ள கழிவு நீரை தரைமட்ட தொட்டி அமைத்து கழிவு நீர் சுத்திகரிப்பு முறை மூலம் (**FSTP**) சுத்திகரிப்பு செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.464.00 இலட்சம் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான கரட்டூர் உரக்கிடங்கில் கசடு கழிவு சுத்திகரிப்பு மையம் (STP Cum FSTP) அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.996.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ.1464.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி 18.05.2023 அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நகராட்சியில் இரண்டு உதவிப்பொறியாளர் பட வரைவாளர் , பணி மேற்பார்வையாளர் , மின் கண்காணிப்பாளர் தலா ஒரு நபர் இருந்த நிலையில் தற்பொழுது ஒரே ஒரு உதவிப்பொறியாளர் மட்டும் உள்ளதால் பல்வேறு திட்டப்பணிகளை உரிய காலத்தில் முடிக்க இயலாமல் கால தாமதம் ஏற்படுகிறது. எனவே மேற்கண்ட தூய்மை இந்தியா 2.0 திட்டப்பணிக்கு திட்ட மேலாண்மைக்குழு (Project Management Committee) அமைத்து பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை மேற்கண்ட திட்ட மதிப்பீட்டிலேயே ஈடு செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.677**

5. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட சரவணா தியேட்டர் சாலை அருகில் உள்ள நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மின்சார ஒயர்கள் பழுதடைந்துள்ளதால் அவற்றை மாற்றி புதிய ஒயர்கள் அமைக்கவும் மேலும் பள்ளி கட்டிடத்தின் மேற்கூரை பகுதியில் மழைநீர் தேங்கி உட்புறம் தண்ணீர் கசிவதால் பூச்சு வேலை மற்றும் இதர பராமரிப்பு பணிகள் செய்ய ஆகும் செலவினம் ரூ.1,50,000/– ஆகும். இச்செலவினத்தை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காண் செலவிலனத்தை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.678**

6. இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள பணிகளை செய்வதற்கு 06.10.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் (Call center ) அமைத்தல் | 5,00,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.14 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் , ஒப்பந்ததாரர் | 1.89 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட சேரன் நகர் பகுதியில் உள்ள கீரிப்பள்ள ஓடை க்கு தடுப்பு சுவர் கட்டுதல் | 1,00,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.14 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் , ஒப்பந்ததாரர் | 1.71 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 3. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் சமையலுக்கு தேவைப்படும் உரகரணங்கள் பழுது சரி செய்தல் | 2,40,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.05 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் , ஒப்பந்ததாரர் | 1.71 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 4. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி பேருந்து நிலையத்தில் தாய்மார்கள் பாலூட்டும் அறையில் பராமரிப்பு பணி செய்தல் | 65,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.11 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் , ஒப்பந்ததாரர் | 1.24 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 சாய் அபிராமி நகர் பகுதியில் அடர்வனக் காடுகளுக்கு ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்தல் | 2,60,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.08 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் , ஒப்பந்ததாரர் | 2.70 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**ந.க.எண். 1461/2023 /இ1**

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

1. .மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிகளில் வ.எண்.1 -க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
3. மேற்படி பணிகளில் வ.எண்.2 -க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
4. மேற்படி பணிகளில் வ.எண்3-க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
5. மேற்படி பணிகளில் வ.எண்4-க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
6. மேற்படி பணிகளில் வ.எண் 5-க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. அனுமதிக்கப்பட்டது. 2, 3, 4, 5, மற்றும் 6 ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மான எண்.679**

7. இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் தகுதிவாய்ந்த பணியாளர்களுக்கு 2023 – 2024 ஆம் ஆண்டிற்கு வழங்க வேண்டிய சீருடை துணிகள் வாங்கி வழங்கிட ஏற்கனவே நகர்மன்ற தீர்மானம் எண்.446 நாள். 30.03.2023 – ல் மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளதால் 71 பணியாளர்களுக்கு தலைப்பாகை துணி மட்டும் 142 மீட்டர் அரசு நிறுவனமான காதி கிராப்ட், கதர் அங்காடி, கோபிசெட்டிபாளையம் அவர்களிடம், அந்நிறுவனத்தினரின் விலைவிகிதத்தில் வாங்கி வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2412/2023/எச் 1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. சீருடைகளை தீபாவளி பண்டிகைக்கு வழங்க வேண்டி உள்ளதால் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1.அனுமதிக்கப்பட்டது. 2.அங்கீகரிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.680.**

(ஒப்பம்)– என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

/ உண்மை நகல்/

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி